1992 மார்ச் 17]

கட்டப்பட வேண்டியது. அந்த ஆற்று நீர்வழி பாலதயினுடைய அகலம் ஏறத்தாழ 300 மீட்டர் ஆகும். இதற்காக மதிப்பீடு சுமார் 1 கோடி ரூபாய் அளவிலே தயாரிக்கப்பட்டு, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே முயற்சிகளை மேற்கொண்டு அந்தப் பகுதியினுடைய மக்களுடைய கஷ்டங்களை உணர்ந்து அதை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று சென்ட்ரல் ரோடு ஃபண்டு ஸ்கீம் என்ற அந்த அளவிலே, அந்தத் திட்டத்திலே சேர்த்து அனுப்பியிருக்கிறோம். ஆகவே விரைவில் ஒப்புதல் கிடைக்கும் எனறு எதிர்பார்க்கின்றோம். வந்த உடனேயே அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு அந்த மக்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிந்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 250. திருமதி கே. எம். கலைச்செல்வி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

250—

புனர்ஜென்ம மூலை என்ற நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம்.

*4010—திருமதி கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி, கே. வி. குப்பம் ஒன்றியம், காங்குப்பம் ஊராட்சியில் புனர்ஜென்ம மூலை என்ற நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்பாடி தொகுதி, கே. வி. குப்பம் ஒன்றியம், காங்குப்பம் ஊராட்சியில் ''புனர்ஜென்ம மூலை'' என்ற நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் காங்குப்பம் கிராமத்தில் மகாதேவ மலையின் அருகே புனர்ஜென்மம் ஓடையின் குறுக்கே குட்டை மட்டும் அமைக்கின்ற திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையும் தேவைப்படுகிறது. எனவே, இது சம்பந்தமாக பொதுப் பணித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. எம். கலைச்செல்வி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனர்ஜென்ம மூலை என்ற நீர்த்தேக்கம் மலையடிவாரத்தில் அமைந்துள்ள பகுதியாகும். மழைக் காலங்களில் மழை நீர் பெரும் அளவில் வெள்ளமாக வந்து கானாற்றில் ஓடி வீணாகிறது. இந்த மழை நீர் வீணாகிவிடாமல் இந்த நீர்த்தேக்கத் திட்டத்தை அமைத்தால் சுமார் சுற்றிலும் உள்ள 30 கிராம விவசாயப் பெருங்குடி மக்களின் விவசாய மேம்பாட்டுக்கு பெரிதும் உதவியாக இருக்கும். எனவே, இதை அமைத்துத்தர இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கின்ற நீர் வரத்தைப் பொறுத்து அந்தப் பகுதியிலே அணைக்கட்டு கட்டுகின்ற திட்டம் தற்போது பொதுப் பணித்துறையினுடைய பரிசீலனையிலே இல்லை. அணைக்கட்டு கட்டுகின்ற நேரத்திலே அதற்கான நீர்வரத்து, அதற்கான அந்த விகிதாச்சார அடிப்படை இருக்க வேண்டும். ஆனால் இந்தப் பகுதியிலே வருகின்ற நீர் வரத்தைப் பொறுத்து ஒரு குட்டை அமைக்கின்ற திட்டம் இருக்கிறது என்று சொன்னேன். ஏறத்தாழ 3,60,000 ரூபாய் செலவிலே குட்டையமைக்கின்ற திட்டம் நம்முடைய பரிசீலனையிலே இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல சம்பந்தப்பட்ட நில நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒத்திசைவு வந்த உடனேயே அந்தக் குட்டை அமைக்கின்ற பணி பொதுப்பணித் துறையினால் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 251. டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அன்னூரில் பேருந்து நிலையம்.

*251—1103—டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி ஒன்றியம் அன்னூரில் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,